(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 83.]

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 ஆகஸ்ட் 01, வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

சமுகமளித்தோர்:

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர்

கௌரவ ரணில் விக்கிரமசிங்க, பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

கௌரவ கயந்த கருணாதிலக்க, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல, அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா, புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அர்ஜுன ரணதுங்க, போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

கௌரவ மலிக் சமரவிக்ரம, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

கௌரவ ரஊப் ஹகீம், நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர்

கௌரவ அஜித் பி. பெரேரா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

கௌரவ எட்வட் குணசேகர, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

கௌரவ கருணாரத்ன பரணவிதான, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன

கௌரவ மஹிந்த அமரவீர

கௌரவ பியசேன கமகே

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மலித் ஜயதிலக

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ சாந்த பண்டார

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ லசஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

கௌரவ கனக ஹேரத்

கௌரவ ஏ. எச். எம். பௌஸி

கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. பத்திரங்கள் சமர்ப்பித்தல்: (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் அதிமேதகு சனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 யூலை 27 ஆம் திகதிய 2133/65 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து அக்கட்டளை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான வெகுசன ஊடக அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. வணிகக் கப்பற்றொழில் (திருத்தம்): துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 ஆகஸ்ட் 08 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

3. சட்டமூலம் கொண்டுவர அனுமதி : பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:- “மரண தண்டனையை இல்லாதொழிக்கவும் அதனோடு தொடர்புடைய ஏற்பாடுகளை செய்வதற்குமானதொரு சட்டமூலம்” எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ பந்துல லால் பண்டாரிகொட பிரேரித்தார். அதனை கௌரவ மயில்வாகனம் திலகராஜா ஆமோதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

4. அனுதாபப் பிரேரணைகள்: முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான காலஞ்சென்ற கௌரவ சேனராஜா சமரநாயக்க, கௌரவ அப்துல் ரசாக் மன்சூர் மற்றும் கௌரவ வி.கே. இந்திக ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளை காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

“கௌரவ கனக ஹேரத் தலைமை தாங்குவாராக” என கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன முன்மொழிய, அதனை கௌரவ சாந்த பண்டார வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.30 மணிக்கு கௌரவ கனக ஹேரத் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 2.15 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய காலஞ் சென்ற கௌரவ சேனராஜா சமரநாயக்க, கௌரவ அப்துல் ரசாக் மன்சூர் மற்றும் கௌரவ வி.கே. இந்திக ஆகியோர்களின் மறைவையொட்டி இப்பாராளுமன்றத்தில் இரு தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் நிகழ்த்திய அனுதாபப் பிரேரணைகளை அங்கீகரித்து தானும் இணைந்துகொண்ட சபாநாயகர் இவ்வுரைகள் அடங்கிய அத்தினத்திற்குரிய பாராளுமன்ற

அதிகார அறிக்கையொன்றின் (ஹன்சாட்) பிரதிகளை மறைவினால் துக்கத்தில் ஆழ்ந்துள்ள அவர்களின் குடும்பத்தார்களுக்கு அனுப்பிவைக்குமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்குப் பணிப்புரை வழங்கினார்.

5. ஒத்திவைப்பு : "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், பி.ப. 3.19 மணிக்கு 2019 ஆகஸ்ட் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.